ASSIST

Integrate Catalyze Transform

# மாநில அரசின் நலத்திட்டங்கள்



# மாநில அரசின் நலத்திட்டங்கள்

# விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள்

## 1. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதிய திட்டம்

### 1. 1. திட்டத்தின் சுருக்கம்

விவசாயிகள் மற்றும் ஆதரவற்ற விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல். ஆண்டுக்கு இருமுறை தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைக்கு ஓய்வூதியர் ஒருவருக்கு ஒரு விலையில்லா சேலை வழங்கப்படும். ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் அங்கன்வாடி மையங்களில் அன்றாடம் சத்துணவு வழங்கப்படும். சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் இரண்டு கிலோ அரிசியும் சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000/-.

### 1. 2.திட்டத்தின் பயன் உடைய பகுதிகள் / நிபந்தனைகள்

- ஆதரவற்றவர் ஆக இருத்தல் வேண்டும்.
- 60 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.
- அசையா சொத்து மதிப்பு 50,000-க்குள் இருக்க வேண்டும்.

### 1. 3.விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

அருகில் உள்ள அரசு இ-சேவை மையத்தை அணுகவும்.

### 1. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- விண்ணப்பதாரரின் புகைப்படம்
- குடும்ப அட்டை அல்லது ஏதாவதொரு முகவரி சான்று
- ஆதார் அட்டை அல்லது மற்ற அடையாள அட்டை
- விண்ணப்பதாரரின் ஒப்புதல் படிவம்
- வங்கி கணக்கு புத்தகம்
- முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்ட அட்டை

### 1. 5.உத்தரவு வழங்கும் அலுவலர்

தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்)

**1. 6.உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்படாமல் அணுக வேண்டிய அலுவலர்**

- தனித்துணை ஆட்சியர்
- சார் ஆட்சியர் /வருவாய் கோட்டாட்சியர்
- மாவட்ட ஆட்சியர்

## 2. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் - உழவர் அட்டை விண்ணப்பித்தல்/ புதுப்பித்தல்

**2. 1.திட்டத்தின் சுருக்கம்**

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பது வருவாய்த்துறையின் உழவர்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டம் ஆகும். இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் மற்றும் அவரது குடும்பத்தினர்கள் அரசின் உதவித் தொகையை பெறலாம்.

- கல்வி உதவித்தொகை- தொழில் பயிற்சி நிறுவனம் மற்றும் பல் தொழில் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி செவிலியர் பட்டப் படிப்பு இளங்கலை பட்டப் படிப்பு முதுகலை பட்டப்படிப்பு சட்டம் பொறியியல் மருத்துவம் கால்நடை அறிவியல் வேளாண்மை தொழிற்கல்வி போன்ற படிப்புகளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு முறை உதவித்தொகை பெறலாம்.
- திருமண உதவித்தொகை பெறலாம்.
- இயற்கை / விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறலாம்.
- கை கால் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு அல்லது பக்கவாதம் அல்லது தற்காலிக இயலாமை காசநோய் புற்றுநோய் இதய நோய் நரம்பியல் நோய் எலும்பு முறிவு போன்றவற்றுக்கு உதவித்தொகை பெறலாம்.
- 60 வயதை கடந்த நிலமற்ற விவசாயக் கூலி தொழிலாளர்கள் இத்திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் பெறலாம்.

**2. 2. திட்டத்தின் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- அரசு ஊழியர்களாக இருக்கக்கூடாது.
- உழவர் அட்டை வைத்திருத்தல் வேண்டும்

**2. 3. விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர்**

அருகில் உள்ள அரசு இ-சேவை மையத்தை அணுகவும்.

### 2. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- குடும்ப அட்டை
- வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்கம்
- உழவர் அட்டை
- ஆதார் அட்டை

### 2. 5. விண்ணப்பிக்கும் முறை

- கல்வி உதவித் தொகைக்கு கல்வியாண்டு தொடங்கி ஆறு மாத காலத்திற்குள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்/ வருவாய் ஆய்வாளர் / வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கலாம்.
- திருமண உதவித் தொகைக்கு திருமணத்திற்கு முன்பு மூன்று மாதத்திற்குள் அல்லது திருமணத்திற்கு பின்பு 6 மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- இயற்கை/ விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகைக்கு இறப்பிற்குப் பிறகு 6 மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.
- கை கால் இழப்பு அல்லது கண் பார்வை இழப்பு அல்லது பக்கவாதம் போன்றவற்றிற்கு விபத்து ஏற்பட்ட 6 மாத காலத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்

### 2. 6. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

- தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம்
- சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்
- மாவட்ட ஆட்சியர்.

## 3. தரமான விதை உற்பத்திக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்

### 3. 1. திட்டத்தின் சுருக்கம்

தரமான விதை உற்பத்தி செய்யும் விதைப்பண்ணை விவசாயிகளை ஊக்கப்படுத்த, அவர்கள் உற்பத்தி செய்யும் அனைத்து விதிகளுக்கும் ஊக்கத்தொகை கொள்முதல் விலையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

- நெல் ஊக்கத்தொகை

ஆதார விதை உற்பத்திக்கு ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை + ஆண்டு உயர்வு + 85 ரூபாய் சான்று / உண்மை நிலை விதை உற்பத்திக்கு - ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை + ஆண்டு உயர்வு + 45 ரூபாய்.

- சிறுதானியங்கள் ஊக்கத்தொகை

  ஆதார விதை உற்பத்திக்கு- ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை + ஆண்டு உயர்வு + 100 ரூபாய் சான்று/ உண்மை நிலை விதை உற்பத்திக்கு- ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை+_ஆண்டு உயர்வு+ 45 ரூபாய்.

- பயறுவகைகள் ஊக்கத்தொகை

  ஆதார விதை உற்பத்திக்கு- ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை + ஆண்டு உயர்வு+ 35 ரூபாய் சான்று/ உண்மை நிலை விதை உற்பத்திக்கு- ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை+ ஆண்டு உயர்வு + 30 ரூபாய்

- நிலக்கடலை, எல், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு ஊக்கத்தொகை ஆதார விதை உற்பத்திக்கு - ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை + ஆண்டு உயர்வு+ 25 ரூபாய் சான்று/ உண்மை நிலை விதை உற்பத்திக்கு- ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை + ஆண்டு உயர்வு+ 20 ரூபாய்.

- பருத்தி ஊக்கத்தொகை

ஆதார விதை உற்பத்திக்கு - சராசரி உள்ளூர் அங்காடி விலை + 110 ரூபாய் சான்று விதை உற்பத்திக்கு-_ஆண்டு சராசரி உள்ளூர் அங்காடி விலை 100 ரூபாய்.

**3. 2. திட்டத்தின் பயன் உடைய பகுதிகள் / நிபந்தனைகள்**

- தரமான விதை உற்பத்தி செய்யும் வேளாண் துறைக்கு ஒப்பந்தப்படி வழங்குவதற்கு விருப்பமுள்ள அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் சேரவும், அவர்களின் விதைப் பண்ணைகளை பதிவு செய்யவும் தகுதியானவர்கள்.
- விதிமுறைகளின் அடிப்படையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.
- பண்ணை மகளிர் குழுக்களுக்கும், உழவர் ஆர்வலர் குழுக்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
- விவசாயிகளுக்கு தேவையான விதைகள் வேளாண்மை துறை நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலைக்கு கொள்முதல், சுத்திகரிப்பு, சான்று கட்டளை, கொள்கலன் மற்றும் இடை நிகழ்வு செலவு உள்ளடங்கிய வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகிக்கப்படும். விதையின் தரநிர்ணய திணை பராமரிப்பதற்காக களப்பணியாளர்கள், விதைச்சான்று அலுவலர்கள் அளிக்கும் வழிமுறைகளை விவசாயிகள் பின்பற்றுதல் வேண்டும். விதை உற்பத்தி யாளர் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி

விதைப் பண்ணைகளை விதைச்சான்று துறையில் பதிவு செய்தல் வேண்டும். மொத்த பயிர்காலத்தில் வயல் அளவில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை பின்பற்றி நிறைவு செய்தபின் உற்பத்தியான விதைகள் வயல் அளவில் தகுதியானவர் கவிதைகளாக அறிவிக்கப்படுகிறது. இவ்விதைகள் புறத்தூய்மை இனத்தூய்மை முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் ஆகிய காரணங்களில் விதைச்சான்று துறையால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் தேர்ச்சி பெறவேண்டும் உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் விதைச்சான்று அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு வேளாண்மைத் துறையின் இயங்கிவரும் அருகில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். இவ்விதைகளை விதை சாகுபடியாளர்கள் சொந்த செலவில் விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு விதை சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட விதைக்கு அரசு நெல் மற்றும் சிறுதானிய விதைகளுக்கு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதரவு விலை யில் 90 சதவீதமும், பயறு மற்றும் எண்ணெய் வித்து விதைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையில் 80 சதவீதமும் முன்பணமாக விதைப் பண்ணை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

### 3. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

### 3. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கள்

### 3. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

வேளாண்மை இயக்குனர், வேளாண்மை இயக்குனரகம், சேப்பாக்கம், சென்னை–5. தொலைபேசி எண்: 2852 4894 நிகரி: 2855 1763.

## 4. மண்வளத்தை பாதுகாக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்

### 4. 1. திட்டத்தின் சுருக்கம்

நுண்ணூட்ட கலவை வினியோகம்

அனைத்து பயிர்களுக்கான நுண்ணூட்ட கலவையை முழு விலையில் விநியோகித்தல் பயிர் கிலோ ஒன்றிற்கு

- நெல் (அடி உரம்) – ரூபாய் 30.70
- சிறுதானியங்கள் ரூபாய் 58.35
- தென்னை ரூபாய் 57.70
- பருத்தி (அடி உரம்) ரூபாய் 68.00
- கரும்பு (அடி உரம்) ரூபாய் 34.40
- நிலக்கடலை (அடி உரம்) ரூபாய் 42.85
- இலைவழி தெளிப்பு
- கரும்பு ரூபாய் 42.70
- பருத்தி ரூபாய் 33.05
- நெல் ரூபாய் 36.10
- உயிர் உரங்கள் விநியோகம்

அசோஸ்பைரில்லிம், ரைசோபியம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் விவசாயிகளுக்கு ரூபாய் 200 கிராம் பாக்கெட்டுக்கு 6.

- நீலப்பச்சைப்பாசி வினியோகம்
- நீலப்பச்சைப்பாசி முழு விலையில் விநியோகம்– கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.75 வீதம்
- புளூரோட்டடஸ் பூஞ்சானம் மூலம் பண்ணைக் கழிவுகளிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரித்தல்.

  5 கிலோ யூரியா, ஒரு கிலோ புளூரோட்டடஸ் மற்றும் தொழில்நுட்ப துண்டுபிரசுரம் அடங்கிய ரூபாய் 200 மதிப்புள்ள பைகள் இலவசமாக வழங்குதல்.
- பசுந்தாள் உர விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

  பசுந்தாள் உர விதை விநியோகம் – விதை விலையில் 50 சதவீத மானியம்.

### 4. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

- மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகள்

### 4. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண்மை அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

#### 4. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கள்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2

சிட்டா, அடங்கல்,, ஆதார் அட்டை குடும்ப, வங்கி கணக்கு புத்தகம் தலா 2 நகல்கள்.

#### 4.5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

### 5. பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்

#### 5.1. திட்டத்தின் சுருக்கம்

- தென்னையில் காண்டாமிருக வண்டு கட்டுப்படுத்த பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாணம் வினியோகம்- இலவசமாக
- தென்னையில் கருந்தலைப் புழு வினை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விநியோகம்- எக்டருக்கு ரூபாய் 35 சேவை கட்டணமாக
- கரும்பில் இளங்குருத்து புழு மற்றும் இடைக்கணுப் புழுவை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி விநியோகம் - எக்டருக்கு ரூபாய் 70
- சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை கிராமங்கள்– உயிரியல் காரணிகள் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி

#### 5.2. திட்டத்தின் பயன் உடைய பகுதிகள்/ நிபந்தனைகள்

- அனைத்து மாவட்ட விவசாயிகள்

#### 5.3. விண்ணப்பிக்க அணுகவேண்டிய அலுவலர்கள்

- உதவி வேளாண்மை அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் அலுவலர்
- வேளாண்மை இணை இயக்குனர்

### 5.4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கள்

### 5.5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 6.பயிர் உற்பத்தி திறனை அதிகரிக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் (எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் பனை மற்றும் தென்னை மர பயிர்களுக்கான தேசிய இயக்கம்)

### 6.1. திட்டத்தின் சுருக்கம்

குறு இயக்கம் 1:எண்ணெய் வித்துக்கள்

1.வல்லுநர் விதைகள் கொள்முதல்- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் / இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் நிறுவனங்களிலிருந்து வாங்கப்படும் அனைத்து வல்லுனர் விதைகளுக்கு மானியம்- கடந்த பதினைந்து ஆண்டுகளில் வெளிவந்த இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூபாய் 15,000/- மானியம்.

2. ஆதார மற்றும் சான்று விதைகள் உற்பத்தி- விதைகள் உற்பத்தி செய்து வேளாண்மைதுறைக்கு வழங்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல் - கடந்த 15 ஆண்டுகளுக்குள் வெளிவந்த இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களுக்கு குவிண்டாலுக்கு ரூபாய் 1000/- உற்பத்தி மானியம்,

3. சான்று விதைகள் விநியோகம்-கடந்த 15 ஆண்டுகளுக்குள் வெளிவந்த இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களுக்கு விதையின் விலையில் 50 சதவீத மானியம் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு - நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு ரகங்களுக்கு ரூபாய் 2,500/- மானியம், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு பயிர்களில் வீரிய ஒட்டு ரகங்களுக்கு மற்றும் எல் ரகங்களுக்கு ரூபாய் 5000/- மானியம்.

4. பெருவிளக்க திடல் அமைத்தல் - விவசாயி ஒருவருக்கு அதிகபட்சம் ஒரு ஏக்கர் நிலக்கடலை பயிருக்கு மானியம்இடுபொருள்(விதை, உயிரியல் கட்டுப்பாட்டு காரணி,நுண்ணூட்டக் கலவை, உயிர் உரம், ஜிப்சம், கலப்பு

நுண்ணூட்ட உரம்; விதைப்புக் கருவி கொண்டு விதைத்தல் மற்றும் களைக்கொல்லி) விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக எக்டருக்கு ரூபாய் 7,500.

5. சுழல் கலப்பை வினியோகம் - ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு- 50 சதவீதம் மானியம் அதிகபட்சமாக எந்திரம் ஒன்றிற்கு ரூபாய் 63,000/- இதர விவசாயிகளுக்கு- 40 சதவீத மானியம் அதிகபட்சமாக இயந்திரம் ஒன்றுக்கு ரூபாய் 50,000/- மானியம்.

**<u>குரு இயக்கம் 2:எண்ணைப்பனை</u>**

1. எண்ணைப்பனை கன்றுகள் விநியோகம் - விவசாயிகளுக்கு சாகுபடி பரப்பில் உச்சவரம்பு எதுவுமில்லை, கன்றுகள் விலையில் 85 சதவீத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூபாய் 8000/-

2. பயிர் வளர்ச்சிப் பருவத்தில் சாகுபடி பராமரிப்பு செலவீனம் - 50 சதவீத மானியம் ஆண்டொன்றிற்கு எக்டருக்கு ரூபாய் 4,000/- வீதம் 4 வருடத்திற்கும் சேர்த்து அதிகபட்சமாக எக்டருக்கு ரூபாய் 16,000/- ஆயிரம்.

3. உற்பத்திக்கான இடுபொருள்கள்

- டீசல் அல்லது மின்சார பம்பு செட் ஒன்றிற்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூபாய் 15,000/-
- எண்ணெய்ப்பனை சாகுபடி நிலங்களில் ஊடுபயிர் செய்ய இடுபொருள் (விதை /உரம் /ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம்/ ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை /வேலை மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள்)- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட பயிர்களுக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூபாய் 3000/-
- மண்புழு உரம் மையங்கள்- 50 சதவீத மானியம் அதிகபட்சமாக மையம் ஒன்றுக்கு ரூபாய் 15,000

4. எண்ணைப்பனை அறுவடைக் கருவி விநியோகம் - 50 சதவீத மானியம் அதிகபட்சமாக கருவி ஒன்றிற்கு ரூபாய் 1,500/-

5. இலைகளை தூளாக்கும் கருவி வினியோகம்- 50 சதவீத மானியம் அதிகபட்சமாக கருவி ஒன்றிற்கு ரூபாய் 7000/-

6. விநியோகம் - 50 சதவீத மானியம் அதிகபட்சமாக கருவி ஒன்றிற்கு ரூபாய் 10,000/-

7. எண்ணைப்பனை பழகுலைகளுக்கு பாதுகாப்பு கம்பி வலை அமைத்தல் - 50 சதவீத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ரூபாய் 15,000

8. தொழில்நுட்ப பரிமாற்றம் -

எண்ணைப்பனை உற்பத்திக்கான விவசாயிகள் பயிற்சி 30 விவசாயிகள் கொண்ட ஒரு குழுவிற்கு இரண்டு நாட்கள் பயிற்சிக்கான செலவினம் ரூபாய் 24,000/-(நாளொன்றிற்கு விவசாயி ஒருவருக்கு ரூபாய் 400/-

எண்ணைப்பனை உற்பத்திக்கான அலுவலர் பயிற்சி 20 அலுவலர் கொண்ட ஒரு குழுவிற்கு 2 நாள் பயிற்சிக்கான செலவினம் ரூபாய் 36,000/-(நாளொன்றிற்கு அலுவலர் ஒருவருக்கு ரூபாய் 800/-)

குறு இயக்கம் 3: எண்ணைய் மரப்பயிர்கள்

1. பரப்பு விரிவாக்கம் இடுபொருள் - நிலம் தயாரித்தல், குழிகள் வெட்டுதல், கன்றுகள் கொள்முதல் மற்றும் நடவுக்கு மானியம் ஒன்றிற்கு ஹெக்டேருக்கு

- வேம்பு – 17,000/- (ஹெக்டேருக்கு 400 கன்றுகள்)
- புங்கம் – 20,000/- (ஹெக்டேருக்கு 500 கன்றுகள் )

2. சாகுபடி பராமரிப்பு செலவீனம் - இரண்டாம் வருட பயிருக்கு ஹெக்டேருக்கு ரூபாய் 2000/- மானியம்

3. தொழில்நுட்ப பரிமாற்றம்

   - விவசாயிகள் பயிற்சி - 30 விவசாயிகள் கொண்ட ஒரு குழுவிற்கு 2 நாட்கள் பயிற்சிக்கான செலவினம் ரூபாய் 24,000/- (நாளொன்றிற்கு விவசாயி ஒருவருக்கு ரூபாய் 400/-)
   - அலுவலர் பயிற்சி - 20 அலுவலர் கொண்ட ஒரு குழுவிற்கு 2 நாட்கள் பயிற்சிக்கான செலவினம் ரூபாய் 36,000/- (நாளொன்றிற்கு அலுவலர் ஒருவருக்கு ரூபாய் 800/-)

**6.2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- அனைத்து மாவட்ட விவசாயிகள்
- திட்ட நிதியில் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு - 19%
- பழங்குடியின விவசாயிகளுக்கு - 1% சதவீதம்
- பண்ணை மகளிருக்கு - 30%

### 6.3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

### 6.4.இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கள்

### 6. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 7.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

### 7. 1. திட்டத்தின் சுருக்கம்

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

- வெங்காயம் மேம்பாடு திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 20,000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது.
- பந்தல்: நிரந்தர பந்தல் கட்டமைப்பை அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 2,00,000/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது
- இயற்கை வேளாண்மை ஊக்குவித்தல்: கீரை வகைகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 2,500/- வெண்டைக்காய், கத்தரிக்காய் மற்றும் தக்காளி ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 3,750/- முட்டைக்கோஸ் மற்றும் காலி.:ப்ளவர் ஹெக்டேருக்கு ரூபாய் 5,000/- மானியம் வழங்கப்படுகிறது.

### 7.2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

- இத்திட்டத்திற்கு அனைத்து விவசாயிகளும் தகுதியானவர்கள். ஆனால் எஸ் எஸ் / எம்எஸ் / எஸ் சி / எஸ்டி பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- விவசாயிகளுக்கு சொந்தமான நிலம் / குத்தகைக்கு விடப்பட்ட நிலம்(10 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட குத்தகை இருக்க வேண்டும்)
- விவசாயிகள் வங்கி கணக்கு எண், ஆதார் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்

- நடவு பொருள்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து செலவினங்களை விவசாயிகளே மேற்கொள்ள வேண்டும்
- என் பிஓபி சான்றிதழ் பெற விண்ணப்பித்த அனைத்து விவசாயிகள் குழுக்களும் மற்றும் தனிப்பட்ட விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் தகுதியானவர்கள்.
- இத்திட்டத்தில் உள்ள விவசாயிகளின் வயல்களை பவனில் புகைப்படத்துடன் பதிவு செய்ய வேண்டும்
- நிதி ஒதுக்கீடு பொது பிரிவினருக்கு 80 சதவீதமும், எஸ்சி பிரிவினருக்கு 19 சதவீத, எஸ்டி பிரிவினருக்கு ஒரு சதவீதமும் மற்றும் பெண்களுக்கு மொத்தம் 30 சதவீதமாக ஒதுக்கப்படுகிறது
- உழவன் பதிவு மற்றும் ஹார்நெட் இன் மூலம் பதிவு செய்யப்பட்ட பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும்
- வட்டாரங்களில் பயனாளியின் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியுடன் முன்னுரிமை பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்

### 7.3. விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர்

கிராம அளவில், தொகுதி அளவிலோ அல்லது மாவட்ட அளவில் உள்ள வேளாண் அலுவலர்களிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

### 7. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு அல்லது சிட்டா அடங்கள்

### 7. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 8. நெல் பயிருக்கான ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி மேம்பாட்டு திட்டம்

### 8. 1. திட்டத்தின் சுருக்கம்

1.சான்று விதை உற்பத்திக்கான ஊக்கத்தொகை –10 வருடங்களுக்குட்பட்ட ரகங்களின் சான்று விதைகள் கொள்முதல் செய்யப்படும்போது கிலோவிற்கு ரூபாய் 8/- மானியம்

2. உயர் விளைச்சல் ரக விதைகளுக்கு சான்று விதை விநியோகம் மானியம் – வேளாண் விரிவாக்க மையம் மூலம் வழங்கப்படும் 10 வருடங்களுக்குட்பட்ட சான்று விதைகளுக்கு விற்பனை விலையில் கிலோ ஒன்றிற்கு ரூபாய் 10/- மானியம்

3. எந்திரன் நட வினை பரவலாக்குதல்– 50 சதவீத மானியம் அதிகபட்சமாக எக்டருக்கு ஒன்றிற்கு ரூபாய் 5000/-

4. நாற்றங்கால் தட்டுகள் வழங்குதல் – எந்திரன் நடவுக்கு நாற்றங்கால் அமைக்க தட்டு ஒன்றுக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூபாய் 40/-

5. விசை உழுவை வழங்குதல் – எந்திரம் ஒன்றிற்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூபாய் 75,000/-

**8. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகள்.

**8. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்**

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

**8. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கள்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3 எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2
- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா 2 நகல்கள்

**8. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்**

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 9.சிறுதானிய பயிர்களுக்கான ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்

### 9. 1. திட்டத்தின் சுருக்கம்

- சிறு தானிய பயிர்களில் தரமான விதை உற்பத்தியை ஊக்குவித்தல் - 10 வருடங்களுக்கு உட்பட்ட ரகங்களின் விதை உற்பத்திக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15/- மானியம்.
- உயர் விளைச்சல் ரக விதைகளுக்கு விநியோகம் மானியம்–10 வருடங்களுக்கு உட்பட்ட அனைத்து சிறுதானிய விதைகளுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15/- மானியம்.
- உற்பத்தியை அதிகரிப்பதற்காக நுண்ணூட்ட கலவை விநியோகம் - 50 சதவீத மானியம் அல்லது ஹெக்டர் ஒன்றுக்கு ரூபாய் 500/- (இதில் எது குறைவு)
- சிறு தானிய பயிர்களில் தொகுப்பு செயல் விளக்கங்கள்– (சிறுதானியங்களில் 100 ஹெட்டர் தொகுப்பு: குறு தானியங்களில் 10 ஹெட்டர் தொகுப்பு) இடுபொருள்களுக்கு (விதை; உயிரியல் கட்டுப்பாட்டு காரணி, நுண்ணூட்ட உரம் மற்றும் உயிர் உரம்; அனைத்து சிறுதானிய பயிர்களிலும் விதை விதைக்கும் இயந்திரம் கொண்டு விதைத்தல் மற்றும் இரவை ராகி பயிரில் நடவு)ஹெக்டர் ஒன்றிற்கு ரூபாய் 4,000/-
- மதிப்பு கூட்டுதல் பயிற்சி - 50 விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சிக்கான செலவினம் ரூபாய் 20,000/- (நாளொன்றிற்கு விவசாயி ஒருவருக்கு ரூபாய் 400/-)

### 9. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகள்.

### 9. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண்மை அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

### 9. 4.இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்ட அடங்கள்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்

- மார்பளவு புகைப்படம் 3
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2
- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா இரண்டு நகல்கள்

### 9. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 10. தேசிய உணவு பாதுகாப்பு திட்டம்

### 10. 1. திட்டத்தின் சுருக்கம்

சிறு /3 குறு விவசாயிகளுக்கு 33 சதவீதம் ஒதுக்கீடு / மகளிர் விவசாயிகளுக்கு 30 சதவீத ஒதுக்கீடு / ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 19 சதவீத ஒதுக்கீடு / பழங்குடியின விவசாயிகளுக்கு 1 சதவீத ஒதுக்கீடு/ ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டருக்கு மானியம் வழங்கப்படும்.

### 10. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

- மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகள்

### 10. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

### 10. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்ட அடங்கள்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 2
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2
- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா 2 நகல்கள்

### 10. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 11.வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கம்

### 11. 1. திட்டத்தின் சுருக்கம்

1. விவசாயிகள் பயிற்சி

- வெளிமாநில பயிற்சிக்கு நாளொன்றுக்கு ஒரு விவசாயிக்கு ரூபாய் 1250 ஏழு நாட்கள்
- மாநிலத்திற்குள் பயிற்சிக்கு நாளொன்றிற்கு ஒரு விவசாயிக்கு ரூபாய் 1000 மூன்று நாட்கள்
- மாவட்டத்திற்குள் பயிற்சிக்கு நாளொன்றிற்கு ஒரு விவசாயிக்கு ரூபாய் 250

2. செயல் விளக்கங்கள் அமைத்தல்- செயல் விளக்கம் ஒன்று அமைக்க

- சிறுதானியங்களில் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 2 ஆயிரம்
- நெல் மற்றும் பயறு வகைகளில் ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 3 ஆயிரம்
- இதர பயிர்கள் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் செயல் விளக்கங்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 4 ஆயிரம்

3. கண்டுனர் பயணம்

- 1 வெளி மாநிலத்திற்கு – ஒரு விவசாயிக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 800 ஏழு நாட்கள்
- மாநிலத்திற்குள் ஒரு விவசாயிக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் 400 2 நாட்கள்
- மாவட்டத்திற்குள் ஒரு விவசாயிக்கு நாளொன்றிற்கு ரூபாய் 300 (1 நாள்)

4. உழவர் ஆர்வலர் குழுக்கள், விளைபொருள் ஆர்வலர் குழுக்கள் மற்றும் விவசாயிகள் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் உள்ள விவசாயிகளுக்கு

- திறன் மேம்பாடு மற்றும் சேவைப் பணிகள் – ஒரு குழுவிற்கு வருடத்திற்கு ரூபாய்5,000/-
- விதி – உழவர் ஆர்வலர் குழு / விளைபொருள் ஆர்வலர் குழு / மகளிர் உணவு பாதுகாப்பு குழு ஒன்றிற்கு ரூபாய் 10,000/-

5. சிறந்த விவசாய குழுக்களுக்கான பரிசு மற்றும் ஊக்கத்தொகை - பல்வேறு தொழில் சார்ந்த ஐந்து குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ஒரு வருடத்திற்கு 20 ஆயிரம்

6. சிறந்த விவசாயி காண பரிசு

வட்டார அளவில் பல்வேறு தொழில்கள் சார்ந்த விவசாயிகளில் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு ரூபாய் 10,000

7. மாவட்ட அளவில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கருத்து பரிமாற்றம் - 25 விவசாயிகள் பங்கு பெறும் ஒரு கருத்து பரிமாற்றம் கூட்டத்திற்கு 2 நாட்களுக்கு ரூபாய் 20 ஆயிரம்

8. பண்ணை பள்ளிகள் அமைத்தல்- முன்னோடி விவசாயிகளின் வயல்களில் தொகுப்பு அணுகுமுறையில் வட்டாரம் ஒன்றிற்கு ஆண்டொன்றிற்கு அதிகபட்சமாக 3 பண்ணை பள்ளிகள் அமைத்தல் - ஒன்றிற்கு ரூபாய் 29,414/- வீதம்(இருபத்தி ஐந்து விவசாயிகள் கொண்ட பண்ணை பள்ளி ஒன்றிற்கு பயிரின் முக்கிய பருவங்களில் 6 பயிற்சிகள்)

### 11.2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

- அனைத்து விவசாயிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள்
- மகளிர் விவசாயிகள்
- சுய உதவிக் குழு உறுப்பினர்கள்
- உழவர் ஆர்வலர் குழுக்கள்
- விளைபொருள் ஆர்வலர் குழுக்கள்
- பண்ணை மகளிர் குழுக்கள்
- விவசாய சங்கங்கள்
  - பொது- 80 விழுக்காடு
  - ஆதிதிராவிடர்- 19 விழுக்காடு
  - பழங்குடியினர்- 1 விழுக்காடு

### 11. 3. விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

### 11. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கல்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2
- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா 2 நகல்கள்

### 11. 5 உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 12. விதைகள் மற்றும் நடவு பொருள்களுக்கான துணை இயக்கம்

### 12.1. திட்டத்தின் சுருக்கம்

1. விவசாயிகள் தரமான விதை உற்பத்தி செய்ய நெல், சிறுதானியங்கள் , பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களின் ஆதார / சான்று விதைகள் விநியோகம் அதிகபட்சமாக விவசாயி

ஒருவருக்கு ஏக்கர் ஒன்றிற்கு

- நெல் கிலோ ஒன்றிற்கு ரூபாய் 10
- சிறுதானியங்கள் கிலோ ஒன்றிற்கு ரூபாய் 15
- பயறு வகைகள் கிலோ ஒன்றிற்கு ரூபாய் 25
- எண்ணெய் வித்துக்கள் கிலோ ஒன்றிற்கு ரூபாய் 25

2. ஆதார விதைகளிலிருந்து சான்று விதைகள் உற்பத்தி மேற்கொள்ள மானியம்

ஏக்கர் ஒன்றிற்கு ஒரு கிலோ ஆதார விதைக்கு (15 வருடங்களுக்குள் வெளிவந்த ரகங்களுக்கு)

- பயறு விதைகள் : ரூபாய் 25/-
- எண்ணெய் வித்துக்கள் ரூபாய் 25/-
- சான்றளிப்பு கட்டணம் - பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூபாய் 52.50

### 12.2. திட்டத்தில் பயனடைய தகுதிகள்/ நிபந்தனைகள்

- தரமான விதைகளை தனது சொந்த நிலத்தில் உற்பத்தி செய்து சொந்த உபயோகத்திற்கு, பிற
- விவசாயிகளுக்கு வழங்க முன்வரும் அனைத்து விவசாயிகள் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நீங்களாக
- ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு 11 சதவீதம் ஒதுக்கீடு
- பழங்குடியின விவசாயிகளுக்கு 1 சதவீதம் ஒதுக்கீடு

### 12. 3. விண்ணப்பிக்க வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

### 12. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கல்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2
- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா இரண்டு நகல்கள்

### 12. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 13. ஒருங்கிணைந்த பண்ணை திட்டம்

### 13. 1. திட்டத்தின் சுருக்கம்

கால்நடை, நிலம் தயாரித்தல், விதை, ரசாயன உரங்கள் / அங்கக உரங்கள், பயிர் ஊட்டச்சத்துக்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், கலைக்கொல்லி போன்ற

இடுபொருட்களுக்கு பயனாளி ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு மானியம்

- காலநடை (கறவைமாடுகள்) வளர்ப்பில் தானியப் பயிர்கள், என்னை வித்து பயிர்கள், பயறு வகை பயிர்கள் மற்றும் நார் பயிர்கள் சார்ந்த பயிர் திட்டம் – 50 சதவீத மானியம் (அல்லது) ஹெக்டேருக்கு ரூபாய் 27,500/-
- (கால்நடைக்கு ரூபாய் 17,500/- பயிர் திட்டத்திற்கு ரூபாய் 10,000/-)
- கால்நடை (ஆடுகள் (9+1)) வளர்ப்புடன் கூடிய தானிய பயிர்கள், எண்ணெய் வித்து பயிர்கள், பயறு வகை பயிர்கள் மற்றும் நார் பயிர்கள் சார்ந்த பயிர் திட்டம் – 50 சதவீத மானியம் (அல்லது) ஹெக்டேருக்கு ரூபாய் 23,000/-
- (ஆடுகளுக்கு ரூபாய் 13,500/- பயிர் திட்டத்திற்கு ரூபாய் 10,000/-)

**13. 2 . திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- தானியப் பயிர்கள்: விருதுநகர்,, விழுப்புரம் நாம,, அரியலூர், ராமநாதபுரம், கரூர், சிவகங்கை, கடலூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, ஈரோடு, திருப்பூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், வேலூர், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்
- எண்ணெய் வித்து பயிர்கள்: வேலூர், மதுரை, திருவண்ணாமலை, விழுப்புரம், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்
- பயறு வகை பயிர்கள்: கடலூர், வேலூர், விழுப்புரம், சேலம், தர்மபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்
- நார் பயிர்கள்: பெரம்பலூர் மற்றும் சேலம் மாவட்டங்கள்

**13. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்**

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

**13. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்டா அடங்கள்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2

- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா இரண்டு நகல்கள்

**14. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்**

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்

## 15. தென்னை காப்பீட்டுத்திட்டம்

### 15. 1. திட்டத்தின் சுருக்கம்

காப்பீட்டுக் கட்டணத்தில் 50% தென்னை வளர்ச்சி வாரியம், 25 சதவீதம் மாநில அரசும் மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 25 சதவீதம் காப்பீடு கட்டணத்தை விவசாயிகள் ஏற்பர்.

காப்பீட்டுத் தொகை மற்றும் பிரீமியத் தொகை விவரம்

| தென்னையின் வயது (வருடங்கள்) | ஒரு மரத்திற்கான காப்பீட்டுத் தொகை (ரூபாய்) | ஒரு மரத்திற்கான காப்பீட்டுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 4 முதல் 15 வரை | 900.00 | 9.00 |
| 16 முதல் 60 வரை | 1,750.00 | 14.00 |

### 15. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

குறைந்தது அறிந்து வளமான மரங்களை கொண்டு அனைத்து மாவட்ட தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள்

### 15. 3 விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

- உதவி வேளாண் அலுவலர்
- துணை வேளாண் அலுவலர்
- வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்
- வேளாண் இணை இயக்குனர்

**15. 4.இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

- உழவர் ஒருங்கிணைந்த கையேடு அல்லது சிட்ட அடங்கள்
- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3
- எடுக்கப்பட்ட முழு உருவ புகைப்படம் தலா 2
- ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா இரண்டு நகல்கள்

**15.5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்**

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 16. விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

**16.1. திட்டத்தின் சுருக்கம்**

விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை.

**17. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகள்
- காலக்கெடு 3- 6 மாதங்கள்

**17. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்**

- பள்ளி தலைமை ஆசிரியரிடம் விண்ணப்பிக்க வேண்டும். இதையடுத்து, பள்ளி நிர்வாகம்
- மாவட்ட ஆட்சியரை அணுகும் என எதிர்பார்க்கப்படுகிறது

**17. 4. இணைக்க வேண்டிய சான்றிதழ்கள்**

- வருவாய் அலுவலர்களால் வழங்கப்பட்ட விவசாய தொழிலாளர் அட்டையை பெற்றோர் வைத்திருக்க வேண்டும்.

#### 17. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

- பள்ளி தலைமையாசிரியர்

#### 17. 6. இணையதள முகவரி

https://www.tn.gov.in/scheme/data_view/83388

## 18. தமிழ்நாடு விவசாயிகள் மேம்பாடு மற்றும் நலத்திட்டம்

#### 18. 1. திட்டத்தின் சுருக்கம்

இது விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் இழப்பு அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் மானிய திட்டம் ஆகும்.

- ஒவ்வொரு ஆண்டும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள் மூலம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு மெட்ரிக் டன் விவசாய விளைபொருட்களை விற்பனை செய்யும் விவசாயிகள் / குத்தகைதாரர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவார்கள்.
- அவர்கள் ரூபாய் 50,000/- வரை மானியம் பெற தகுதி உடையவர்கள். மரணம் / விபத்தால் நிரந்தர ஊனம் / பாம்பு கடித்து இறந்தால் ரூபாய் 1,00,000/- விபத்தினால் இரு கை / கால் கண்களை இறந்தவர்களுக்கு ரூபாய் 75,000/- விபத்தால் ஒரு கை / கால் / கண்களை அல்லது நிரந்தர இடுப்பு ஊனத்திற்கு ரூபாய் 50,000/-

இந்த மானியத்திற்கு விவசாயிகள் பிரீமியம் செலுத்த தேவையில்லை. சம்பந்தப்பட்ட மார்க்கெட் கமிட்டி மற்றும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் ஒரு தனிநபருக்கு ஆண்டுக்கு ரூபாய் 10/- பிரீமியமாக வழங்கப்படுகின்றன.

#### 18. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

- விவசாயி

#### 18. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

- தொகுதி அளவில் உள்ள வேளாண் அலுவலர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்

#### 18. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- பூர்த்தி செய்த விண்ணப்பம்

- மார்பளவு புகைப்படம் 3
- முழு உருவ புகைப்படம் தலா 2
- சிட்டா, அடங்கள், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தல 2 நகல்கள்

### 18. 5. உதவிகள் வழங்கப்படும் போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர்/ வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர்/ மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர்/ வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 19. விவசாய உபகரணங்கள் விநியோகம்

### 19. 1. திட்டத்தின் சுருக்கம்

எஸ்.ஆர்.ஐ குறிப்பான்கள் என்பது விவசாயிகளுக்கு நெல் பயிர்களை நடவு செய்ய உதவும் விவசாய கருவிகள் ஆகும். நெல் பயிரிடுவதில் பயிர்களின் பரந்த இடைவெளி ஒரு முக்கிய அம்சமாகும். இத்திட்டம் மாநில அரசால் நிதி அளிக்கப்படுகிறது.

- கட்டம் 1 மற்றும் 11 இன் துணை படுக்கைகளுக்கு ரூபாய் 100/- மானியத்தில் ரூபாய் 1750/- மதிப்புள்ள இம்பிளிமெண்ட்ஸ்
- நான்காம் கட்டத்தில் துணை படுக்கைகளுக்கு ரூபாய் 100/- மானியத்தில் ரூபாய் 700/- மதிப்புள்ள பகுப்பு
- வரி மார்க்கம்
- கையால் இயக்கப்படும் தெளிப்பான்கள் – துணை படுக்கைகளுக்கு ரூபாய் 50 மானியம் ஒரு யூனிட்டுக்கு அதிகபட்சமாக ரூபாய்1250/- வரை மட்டுமே.
- சக்தியால் இயக்கப்படும் தெளிப்பான்கள் – துணைப் படுக்கைகளுக்கு 50 ரூபாய் மானியம் ஒரு யூனிட்டுக்கு அதிகபட்சமாக ரூபாய் 3,000/- வரை. மட்டுமே

### 19. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள்/ நிபந்தனைகள்

- விவசாயி

### 19.3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலோ, தொகுதி அளவிலோ அல்லது மாவட்ட அளவில் உள்ள வேளாண் அலுவலர்களிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

### 19. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

- பூர்த்தி செய்த விண்ணப்பம்
- மார்பளவு புகைப்படம் 3
- முழு உருவ புகைப்படம் தலா 2
- சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கி கணக்கு புத்தகம் தலா 2 நகல்கள்.

### 19. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர்/ வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 20. மானாவாரி நில மேம்பாட்டு ஒருங்கிணைந்த பண்ணை அமைத்தல்

### 20. 1. திட்டத்தின் சுருக்கம்

மானாவாரி நில மேம்பாடு ஒருங்கிணைந்த பண்ணை அமைத்தல். எக்டர் பரப்பளவில், 50 ரூபாய் மானியம் ரூபாய்60,000/- வீதம் வழங்கப்படுகிறது. தேனி அழகுகள், நிரந்தர மண்புழு உரக்கூடம், நாட்டுக்கோழி இனங்கள், செம்மறி ஆடுகள், பால் மாடு / எருமை, நடவு செடிகள் / விதைகள் வழங்கப்படுகின்றன.

### 20. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்

- ஒரு பயனாளிக்கு ஒரு ஏக்கருக்கு மட்டுமே மானியம் வழங்கப்படுகிறது.
- சிறு விவசாய குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்
- பயனாளி ஏற்கனவே ஒரு பால் மாடு / எருமை வைத்திருந்தாள், அவருக்கு கூடுதல் மாடு வழங்கப்படும், அவரிடம் ஏற்கனவே இரண்டு மாடுகள் / எருமைகள் இருந்தால், பயனாளி இத்திட்டத்தை பயன்படுத்த முடியாது.
- எருமை மாடு / ஆடு / செம்மரி ஆடு ஆகியவற்றை பயனாளிகளின் விருப்பத்திற்கு ஏற்ப தங்கள் சொந்த மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். எருமை / பசுவின் வயது 4 ஆண்டுகளுக்கு மிகாமல்

இருக்க வேண்டும் மற்றும் / ஆடு செம்மறி ஆடுகளின் வயது 6 முதல்8 மாதங்கள் வரை இருக்கவேண்டும்.

- முன்னதாக இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாடுகளை மறுபடியும் பயன்படுத்தி மானியம் பெற இயலாது.
- பயனாளி தவறாது கால்நடைகளை அருகில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு கொண்டு சென்று தேவையான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.
- உழவன் பதிவு மற்றும் HORTNET இன் மூலம் பதிவு செய்யப்பட்ட பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும்.

### 20. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவில், தொகுதி அளவிலோ அல்லது மாவட்ட அளவில் உள்ள வேளாண் அலுவலர்களிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

### 20. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்

ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு அல்லது சிட்ட அடங்கள்

### 20. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்

கிராம அளவிலான உதவி வேளாண் அலுவலர் / வட்டார அளவிலான துணை வேளாண் அலுவலர் / மாவட்ட அளவிலான வேளாண் அலுவலர் மற்றும் உதவி வேளாண் இயக்குனர் / வேளாண் இணை இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும்.

## 21. கூட்டு பண்ணையம்

### 21. 1. திட்டத்தின் சுருக்கம்

கூட்டுப்பண்ணை யத்தின் கருத்து என்னவென்றால், ஒரு சிறிய பகுதியில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளை அடையாளம் கண்டு 20 விவசாயிகளுடன் விவசாயிகள் குழுக்கள் (FIG) அமைப்பது.(FIG)-கள் 100 விவசாயிகளுடன் உழவர் உற்பத்தியாளர் குழுவில் (FPG) ஒருங்கிணைக்கப்படும். கூட்டு சாகுபடி, கண் வசதிகள் மற்றும் சந்தை இணைப்புகளை அணுக உள்ளீடுகளை கூட்டாக வாங்குவது போன்றவற்றை (FIG) மற்றும் (FPG) ஊக்குவிக்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 150 (FIG)-கள் மற்றும் 30 (FPG)-கள் கூட்டு விவசாயத்தை மேம்படுத்துவதற்காக 2021-21 நிதியாண்டில் உருவாக்கப்பட்டுள்ளன. மாவட்ட

ஆட்சியர் (FPG)-யின் திட்ட அமலாக்க திட்டத்தின் ஒப்புதலுக்கு பிறகு ஒவ்வொரு (FPG)- க்கும் ரூபாய் 5,00,000/- கார்ப்பஸ் நிதி வழங்கப்படுகிறது.

**21. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- இத்திட்டத்திற்கு அனைத்து விவசாயிகளும் தகுதியானவர்கள். ஆனால்SF/MF/SC/ST பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- சிறு விவசாய குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்
- குத்தகைதாரர்களுக்காக இருந்தால், பதிவு செய்யப்பட்ட குத்தகை ஒப்பந்தம் வழங்கப்படவேண்டும்.

**21. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்**

பின்வரும் ஆவணங்களுடன் உங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளுங்கள்

**21. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

- ஆதார் அட்டை நகல்

**21. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்**

- தோட்டக்கலை உதவி இயக்குனர்.

**22. விவசாயிகளுக்கான தொழில்முனைவோர் திட்டங்கள்**

**22.1. திட்டத்தின் சுருக்கம்**

ஆதி திராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட, அவர்களை தொழில்முனைவோராக உயர்த்தும் நோக்கில், வருவாய் ஈட்டும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- குறைந்தபட்ச தொகை ரூபாய் 1.50 இலட்சம் ஆகும்.

**22. 2. திட்டத்தில் பயனடைய தகுதிகள் / நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர் விவசாயியாக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர், தாட்கோ திட்டங்களில் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது
- சிறப்பு திட்டமான தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் இருக்க வேண்டும்

- மனுதாரர் ஆதிதிராவிடர் பிரிவினரை சேர்ந்தவர் ஆகும்,18-65 வயதுக்குள்ளாக இருக்க வேண்டும்
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் ஏதும் பெற்றிருக்கக் கூடாது.
- கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்
- தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்

**22. 3. விண்ணப்பிக்க அணுக வேண்டிய அலுவலர்**

மாவட்ட மேலாளர், தாட்கோ.

**22. 4. இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள்**

- சமூக சான்றிதழ்கள்
- இருப்பிட சான்றிதழ்கள்
- வருமான சான்றிதழ்கள்
- பிறப்புச் சான்றிதழ்கள்

**22. 5. உதவிகள் வழங்கப்படும்போது காலதாமதம் ஏற்பட்டால் அணுக வேண்டிய அலுவலர்**

அந்தந்த பகுதிக்கான மேலாளர், தாட்கோ.



**ASSIST - Auxilium Synergy Source**
**for Integrated Social Transformation**
**Auxilium Provincial House, Salesian Sisters,**
**Madurai Main Road, Manikandam,**
**Tiruchirapalli - 620012**

**Phone: (+91) 75388 60726 Email: intfmado@gmail.com**
**Web: www.assistfma.com**